**கவனிக்க.-** *04.04.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1758 - 2012 මැයි මස 11 වැනි සිකුරාදා - 2012.05.11

*1758 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 870 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 875 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவு திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 879 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2012, மே மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, மே மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பதவிகள் — வெற்றிடம்

## வலல்லாவிட்ட பிரதேச சபை

மேல் மாகாண அரச சேவையில் வலல்லாவிட பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த தகைமையுடைய வலல்லாவிட பிரதேச சபை எல்லைக்குள் வசிப்பவர்களிடம் இருந்து மட்டும் விண்ணப்பம் கோரப்படுகின்றது.

விண்ணப்பதாரிகள் இங்கே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயார் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தி செயலாளர் வலல்லாவிட பிரதேச சபை மீகாதென்ன என்ற விலாசத்திற்கு 2012, வைகாசி மாதம் 31 ஆந் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்.

| தொடர் எண் | பதவிப் பெயர் | பதவி எண்ணிக்கை | சம்பளத் திட்டம் (மாதாந்தம்) | கல்வித் தகைமையும் ஆட்சேர்த்தல் முறையும் |
|---|---|---|---|---|
| 01 | சாரதி தரம் I | 01 | PL3-2006A ரூபா 12,470-10×130 - 10×145-10×160 - 12× 170 - ரூபா 18,860 | கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகாரம் பெற்ற பாடசாலையில் குறைந்தது 08 ஆம் தரம் சித்தியடைந்திருத்தல்.<br><br>**தொழிற்றகைமை :**<br>(1) தனியார்/வாடகை வண்டி, கனமில்லாத வேன் வண்டி ஓட்டுதல் தொடர்பாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேர்ச்சி தொடர்பான சான்றிதழ் பெற்றிருத்தல்.<br>(ஆட்சேர்த்தல் தினத்திற்கு 3 வருடத்திற்கு முன் அச்சான்றிதழ் பெற்றிருத்தல்.)<br>(2) வாகன சாரதியாக 3 வருட அனுபவம் இருத்தல்.<br>(3) பெருந்தெருக்கல் சட்டக்கோவை தொடர்பாக பூரண அறிவு இருத்தல்.<br><br>**வேறு தகைமைகள் :**<br>(1) குறைந்தபட்ச உயரம் 5 அடிக்கு மேல் இருத்தல்.<br>(2) பகல் இரவு வேலைகளில் சிறந்த கண்பார்வை உள்ளவராக இருத்தல். |
| 2 | அலுவலக தொழிலாளர் | 02 | PL1-2006A ரூபா 11,730-10×120 - 10×130-10×145 - 12× 160 - ரூபா 17,600 | கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகாரம்பெற்ற பாடசாலையில் குறைந்தது 08 ஆம் தரம் சித்தியடைந்திருத்தல்.<br>(1) இலங்கையராக இருத்தல்.<br>(2) நன்னடத்தையும் நல்ல உடல் ஆரோக்கியம் உடையவராக இருத்தல்.<br>(3) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் தினத்திற்கு வயது 18க்கும் 45 இற்கும் இடைப்பட்டிருத்தல் (என்றாலும் அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையிலுள்ள நிரந்தர உத்தியோகத்தர்களுக்கு உச்ச வயதெல்லை கட்டுப்பாடற்றது.)<br>(4) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் தினத்திற்கு முன் கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல். |

மாகாண அரச சேவையில் அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தில் பதில் கடமை புரிபவராயின் அல்லது பதவிக்கு உரித்தான அனுபவம் அல்லது பயிற்சி பெற்றிருப்பின் விசேட தகைமையாக கருதப்படும்.

இவ்விண்ணப்பப் படிவம் கோரப்பட்ட பின் அல்லது அதற்கிடையில் ஆட்சேர்த்தலை தாமதித்தல் அல்லது இவ் அறிவித்தலை ரத்து செய்தல் போன்ற அனைத்து அதிகாரமும் வலல்லாவிட்ட பிரதேச சபை செயலாளரிடம் தங்கியுள்ளது.

**ஆட்சேர்த்தலுக்கான பொது நியதிகள்.**- (1) விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல் ;

(2) விண்ணப்பதாரி விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் தினத்திற்கு மூன்று வருடங்களுக்கு முன் மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவானவராக இருத்தல் ;

(3) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் தினத்திற்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் (அரச அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பணியாளர் தொடர்பாக உச்ச வயதெல்லை கட்டுப்பாடற்றது) ;

(4) விண்ணப்பதாரி நல்ல உடல் ஆரோக்கியம் உடையவராக இருத்தல் ;

(5) தண்டனை சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டவர் அல்லது அரச உள்ளூராட்சி பணியிலிருந்து விளக்கப்பட்டவராக இருத்தல் கூடாது ;

(6) விண்ணப்பப்படிவம் கோரப்பட்ட பின் அல்லது கோரப்படும் இடைக்காலத்தினுள் அல்லது இவ் ஆட்சேர்த்தலை பிந்திப் போடுதல் அல்லது மாற்றம் செய்தல் அல்லது இவ் அறிவித்தலை இரத்து செய்தல் அல்லது சீரமைத்தல் வலல்லாவிட்ட பிரதேச சபை செயலாளரிடம் தங்கியுள்ளது.

**பணிக்கமர்த்தும் நியதிகள்.**- (1) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துக்குரியதாகும் ;

(2) தகுதி கூர் காலமாக 3 வருடம் உள்ளடக்கப்படும் ;

(3) விதவை, விதவை அநாதைகள் உபகார சம்பளத் திட்டத்திற்கு சந்தாப்பணம் செலுத்தவேண்டும் ;

(4) இவ் ஆட்சேர்த்தல் நியதிகளுக்கும் சட்டதிட்டங்களுக்கும் புறம்பாக இலங்கைக் குடியரசின் நிறுவனக் கோவை சட்டத்திட்டங்களும், நிதி சட்டதிட்டமும் அரச திணைக்களத்து கட்டளைகளும் மேல் மாகாண சபை அல்லது மேல்மாகாண அரச சேவை ஆணைக்குழு அல்லது வலல்லாவிட பிரதேச சபையினால் அவ்வப்போது வெளியிடும் சட்டத்திட்டங்கள், கட்டளைகளுக்கு ஒத்து செயற்படுவதற்கு இணங்கப்படவேண்டும்.

**விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கும் முறை.**- இவ் அறிவித்தலின் மாதிரி விண்ணப்பப்படிவத்தை 12" × 8" அளவான விண்ணப்பப்படிவம் தயாரித்து விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்ட உரையின் இடது பக்கம் எழுதி 2012, வைகாசி 31 ஆந் திகதிக்கு முன் "செயலாளர் வலல்லாவிட பிரதேச சபை, மீகாதென்ன" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும். (தற்போது மாகாண அரச சேவையை வகிக்கும் விண்ணப்பதாரிகள் தனது விண்ணப்பப்படிவத்தை நிறுவன தலைவர் மூலம் அனுப்ப வேண்டும்) குறிப்பிட்ட தினத்திற்கு பின் கிடைக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவத்தோடு பின்வரும் ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்திய பிரதிகளை அனுப்ப வேண்டும் :-

(1) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ;
(4) அண்மையில் பெற்றுக்கொண்ட கிராம சேவையாளர் சான்றிதழ் ;
(5) அண்மையில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ்கள் இரண்டு ;
(6) வேறு தகைமைகள் கொண்ட சான்றிதழ்கள் ;
(7) பணி அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள்.

செயலாளர்,
வலல்லாவிட்ட பிரதேச சபை,
மீகாதென்ன.

2012, மாச்சு 21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வலல்லாவிட்ட பிரதேச சபை**

................ பதவி

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :-----.
2. முகவரி :-----.
3. பிறந்த திகதி : ஆண்டு :------, மாதம் :------, திகதி :-----.
4. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் தினத்திற்கு வயது : வருடங்கள் :------, மாதங்கள் :------, நாட்கள் :-----.

5. பால் :-----.
6. திருமணமானவரா/திருமணமாகாதவரா ? :-----.
7. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
8. இனம் :-----.
9. நீர் இலங்கைப் பிரசையா ? :-----.
அப்படியாயின் பரம்பரையா/பதிவு செய்தமையாலா? :-----.
10. கல்வித் தகைமை (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.
11. தொழிற் தகைமையும் வேறு தகைமைகளும் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்).
12. பணி அனுபவம் :-----.
13. ஏதாவது குற்றத்திற்காக என்றாவது ஒரு நாள் நீதிமன்றத்தில் குற்றவாளியாக இருந்திருந்தால் அக்குற்றத்திற்கு கிடைத்த தண்டனை தொடர்பாக விபரம் தருக. -----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என்பதனை உறுதியுரைக்கின்றேன். இதில் உள்ள தகவல்கள் ஏதாவது உண்மையற்றது, பிழையானதாயின் என்னை இப்பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவந்தால் தகுதியற்றவனாவேன் என்பதோடு பதவி கிடைக்கப்பெற்றப் பின் அவ்வாறான காரணம் நிரூபிக்கப்பட்டால் எந்த ஒரு நட்டயீடும் இல்லாமலே பணியிலிருந்து விளக்கப்படுவேன் என்பதனையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

5-156

---

## நீர்கொழும்பு மாநகர சபை

மேல் மாகாண அரச சேவையில் பதவிகள் வெற்றிடம்

நீர்கொழும்பு மாநகர சபையில் தற்போது வெற்றிடங்களாயுள்ள பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டு மேல் மாகாண மாகாண சபையினுள் நிரந்தர வசிப்பாளர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய (12 " × 8" அளவினதான) விண்ணப்பப்படிவத்தினை தயாரித்து விண்ணப்பிக்கும் பதவியை உரிய கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்து 2012.06.11 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ''மாநகர ஆணையாளர், நீர்கொழும்பு மாநகர சபை, நீர்கொழும்பு'' எனும் முகவரிக்கு பதிவுத்தபால்மூலம் அனுப்புதல் வேண்டும்.

தற்போது மாகாண அரசாங்க சேவையிலுள்ளோர் தங்கள் விண்ணப்பங்களை சேவையாற்றும் தலைவர்மூலம் அனுப்புதல் வேண்டும்.

| தொடர் இல. | பதவிகள் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01. | அலுவலக ஊழியர் அ. ஊ. சே. III | 02 | பீஎல் 1-2006ஏ ஆரம்ப சம்பள நிலை ரூபா 11,730. நான்காவது படிநிலைக்கு முன் வினைத்திறமைகாண் தடை உண்டு. | எட்டாந் தரத்தில்/9 ஆம் ஆண்டில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். |
| 02. | நூலக ஊழியர் அ. ஊ. சே. III | 01பீ | பீஎல் 1-2006ஏ ஆரம்ப சம்பள நிலை ரூபா 11,730. நான்காவது படிநிலைக்கு முன் வினைத்திறமைகாண் தடை உண்டு. | எட்டாந் தரத்தில்/9 ஆம் ஆண்டில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். |

**சேவை நிபந்தனைகளும் நியதிகளும் :**

(அ) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும் ;

(ஆ) விதவைகள்/தபுதாரி, அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு அங்கத்துவ பணம் செலுத்துதல் வேண்டும் ;

(இ) இப்பதவிக்கு நியமனம்பெற்றோர் 3 வருட கால நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டவராவர். இக்காலத்திற்குள் வேலை, வருகை மற்றும் நடத்தை திருப்திகரமானதாக இருக்குமாயின், நன்னடத்தை கால இறுதியில் நிரந்தரமாக்கப்படுவர். ஏற்கனவே அரச சேவையில்/ மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிப்போர் 1 வருட பதிற் கடமையாற்றும் பதவியில் வைக்கப்படுவர்.

***ஏனைய பொது நிபந்தனைகள்.*** - 1. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஊழியருக்கு இவ்வயதெல்லை ஏற்புடைத்தாகாது.)

2. விண்ணப்பதாரிகள் பரம்பரையாகவோ அல்லது பதிவின் மூலமாகவோ இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;

3. விண்ணப்பதாரிகள் சிறந்த நடத்தையும் நல்ல தேகாரோக்கியமுடையவராகவிருத்தல் வேண்டும் ; இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் ஒரு மாத காலத்திற்குள் அரச வைத்தியர் ஒருவரினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு தோற்றுதல் வேண்டும் என்பதுடன் அப்பரிசோதனையில் உடல்நலம் குன்றியவராக தெரியவரின் நியமனம் இரத்துச்செய்யப்படும் ;

4. தண்டச் சட்டக்கோவையின்கீழ் நீதிமன்றில் தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது ;

5. விண்ணப்பம் கோரும் திகதியன்று தொடர்ச்சியாக மூன்று வருட காலம் மேல் மாகாணத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும் ;

6. அரச/மாகாண அரச சேவையில் வெளியேற்றப்பட்டவராக இருத்தல் கூடாது என்பதுடன் மாகாண அரச நிருவாக சுற்றறிக்கை இல. 44/90 இன்கீழ் ஓய்வுபெற்றவராக இருத்தலும் கூடாது ;

5. எல்லா அலுவலர்களும் பதவிக்கு நியமிக்கப்பட்டு 5 ஆண்டிற்குள் இரண்டாம் அரசகரும மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்த்துக்கொள்ளும் விதம்.** - பெறப்பட்ட விண்ணப்பங்களில் தகைமைபெற்றுள்ள விண்ணப்பதாரிகள் பொது நிருவாக சுற்றறிக்கை இல. 24/95 இற்கமைய நேர்முகப்பரீட்சையின்மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீர்கொழும்பு மாநகர சபை**

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

........................................... பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.

2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :-----.

3. தற்போது சேவையாற்றும் நிறுவனம் மற்றும் பதவி :-----.

4. சேவைக்காலம் (பதவிக்குரியவற்றை வெவ்வேறாக தரவும்) :-----.

5. தேசிய அடையாள அட்டை :-----.

6. நிரந்தர விலாசம் :-----.

7. தபால் விலாசம் :-----.

8. நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :-----.

9. நிரந்தரமாக வசிக்கும் காலம் :----- இருந்து ----- வரை

10. நிரந்தரமாக வசிக்கும் பிரதேச செயலாளர் பிரிவு :-----.

11. நிரந்தரமாக வசிக்கும் உள்ளூராட்சி நிறுவனத்திற்கான அதிகார பிரதேசம் :-----.

12. பிறந்த திகதி :-----.

13. 2012 ஆந் திகதியன்று வயது :-----.

14. கல்வித் தகைமைகள் :-----.

15. பார வாகனம் ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரம் பற்றிய விபரம் :-----.

16. அனுபவம் :-----.

17. பதவிக்குரிய தொழில் பாடநெறி பற்றிய விபரம் :-----.

18. ஏனைய தகைமைகள் :-----.

19. நீங்கள் நீதிமன்றினால் குற்றவாளியாக காணப்பட்டீரா? :-----.

20. மேல் மாகாணத்திற்குள் கடந்த 3 வருடங்கள் வசித்தது பற்றிய விபரம் :-----.

இங்கு குறிப்பிட்டுள்ள தகவல்கள், எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானதும் பிழையற்றதும் என வெளிப்படுத்துகிறேன். இங்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள பொய்யான தகவல்கள் நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னராயின் பதவி நீக்கத்திற்கு ஆட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

.......................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**விண்ணப்பதாரி தற்போது அரச சேவையில் பதவி வகிப்பாராயின், திணைக்களத்/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ..................................................................................... தற்போது இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் சேவையாற்றுகிறார். மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு நியமிக்கப்படுவராயின், அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்விதத்திலும் சட்டத்திற்குட்பட்ட தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என இத்தால் சான்றுப்படுத்துவதுடன் விண்ணப்பப்படிவத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கிறேன்.

.......................................................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
திணைக்களம்/ நிறுவனம் :-----.
(பதவி முத்திரையை இடவும்).
திகதி :-----.

5-193

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**வத்தளை - மாபோலை நகரசபை**

*கால்நடை வெட்டுதல் கட்டளைச் சட்டம்*
*(1892 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின்படி)*

*இதன்கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு அதில் குறிப்பிடப்பட்ட பெயர் உடையவர் 2012 ஆம் வருட கால்நடை இறைச்சி விற்பதற்காக அனுமதி கோரி விற்பனை செய்வதற்காக விண்ணப்பம் செய்துள்ளார். இவ்விண்ணப்பதாரி கோரியுள்ள இடமானது வத்தளை-மாபோலை பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ளதால் இவ்விண்ணப்பத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் இவ்விடயம் சம்பந்தமாக அரசாங்க வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரமான 14 நாட்களுக்குள் இரண்டு பிரதிகளுடன் பதிவுத்தபாலில் அனுப்பிவையுங்கள்.*

*இப்பிரசுரமானது, கால்நடை வெட்டுதல் சட்டப்பிரிவின் இல. 7 (1) அத்துடன் 7 (2) இற்கு அமைய தெரிவிக்கப்படுகின்றது.*

*ஏ. எச். எம். நவ்ஷாட்,*
*தலைவர்,*
*வத்தளை-மாபோலை நகரசபை.*

*நகரசபை அலுவலகம்,*
*வத்தளை-மாபோலை,*
*2012, ஏப்பிறல் 04.*

**அட்டவணை**

| | தொடர் விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் | வியாபாரம் | வியாபாரம் நடைபெறும் இடத்தின் முகவரி |
|---|---|---|---|
| (1) | மொஹொமத் அபீக்ஷா, இல. 776/2, நீர்கொழும்பு வீதி, மாபோலை - வத்தளை | கால்நடை இறைச்சி, விற்பனை நிலையம் | இல. 776/2, நீர்கொழும்பு வீதி, மாபோலை - வத்தளை |

5-172

---

**பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் உள்ள தகனக் கிரியைகள்**

மேற்கொள்ளப்படும் பொது மயானங்களின் பெயர்ப்பட்டியல்

1. உடுவெல, லுனுவெல பொது மயானம் - உடுவெல
2. ஐந்தாம் கட்டையில் உள்ள சிங்கள-தமிழ் பொது மயானம், உடுவெல தோட்டம்
3. உடந்கத பொது மயானம், உடுவெல தோட்டம்
4. உடுவெல தோட்ட பொது மயானம், வெவேவத்த
5. "ஜன உதான" கிராமத்தின் பொது மயானம், ரடேமுல்ல
6. அலுத்வத்த பொது மயானம், வெல்தம்மல
7. "குருவாகொடுவ" பொது மயானம், நெஹெனிவெல
8. "கொன்கொல்ல" பொது மயானம், ஓதென்ன
9. "கொமகொடபிடிய" பொது மயானம், எதுல்கம
10. பூ லியத்த பொது மயானம், பூ லியத்த
11. பன்னவெல மயானம், பன்னவெல
12. உனுவின்ன மயானம், உனுவின்ன
13. உடமயிலபிடிய மயானம், உடமயிலபிடிய
14. ஹபுதல எகொடகம மயானம்
15. லக்பஹன ஜனபத மயானம்
16. ஹத்பேய மயானம், ஹத்பேய
17. குருலு கந்தூர மயானம், குருலு கந்தூர
18. அபோன்சு வத்த மயானம், அபோன்சு வத்த
19. பின்னராவ ஜனபதய மயானம், பின்னராவ
20. ஆரேக்கர் மயானம், வைத்தியசாலை வீதி, கலஹா
21. சுதுவெல்ல மயானம், சுதவெல்ல
22. ஹய்த்வத்த மயானம், ஹய்த்வத்த
23. லிற்றில் வெலி தமிழ் மயானம், தெல்தோட்ட
24. மாரஸ்ஸன மயானம், வைத்தியசாலைக்கு அருகாமையில்
25. எலிக்கேவெல மயானம், எலிக்கேவெல
26. ஹேவாவிஸ்ஸ மயானம், மாரஸ்ஸன மகா வித்தியாலயத்துக்கு அருகாமையில்
27. மூனமலே மயானம், நிகத்தவெல
28. பல்லே மாஓய மயானம், பல்லே மாஓய
29. தெதிகன்னாவெல மயானம், தெதிகன்னாவெல
30. அம்பவத்த மயில கஸ்யாய மயானம்
31. கரகஸ்கட மயானம், கரகஸ்கட
32. கந்தேகம மயானம், கந்தேகம
33. போபிட்டிவத்த பவ்லான சந்தி மயானம், போபிட்டிவத்த
34. கோமதிய பொக்குண மயானம், நவநெலிய
35. கொடலவெல மயானம், கொடலவெல
36. கலஹா கொடல தென்ன மயானம், பேரவத்த, உடதெல்தோட்ட
37. ஹபுவலமான மயானம், பேரவத்த
38. பின்னகொல்ல மயானம், பின்னகொல்ல

39. நுகலியத்த மயானம், நுகலியத்த
40. மொட்டாவ மயானம், மொட்டாவ
41. தூல்மூரே மயானம், தூல்மூரே
42. போலாபே மயானம். போலாபே
43. கொல்லன்வெலபிடிய மயானம், முதுனக்கடை
44. தலாத்துஓய உன்ஹிஸ்னாவ பொது மயானம், தலாத்துஓய
45. இங்குருகொல்ல பொது மயானம், இங்குருகொல்ல
46. எதுல்கம பொது மயானம், பின்னராவ
47. அம்பலமான பொது மயானம், அம்பலமான
48. கல்லிந்த மயானம், கல்லிந்த
49. ஹத போஹின்ன மயானம், முரபொல
50. கிராம்பே மயானம், கொலபிஸ்ஸ
51. நவநெலிய ஹாலங்வங்குவ மயானம், நவநெலிய
52. நவநெலிய யக்காவங்குவ மயானம், நவநெலிய
53. கரகஸ்கட வீதி மயானம், தெல்தோட்டை
54. கோனங்கொட மயானம், கோனங்கொட
55. கபடாகம நெல்லிகொல்ல மயானம், கபடாகம
56. பெல்வூட் பாலுகம மயானம், பாலுகம
57. பெல்வூட் ஜனபதய மயானம், பெல்வூட் ஜனபத
58. கபுலியத்த மயானம், கபுலியத்த
59. பட்டியமுல்ல மயானம்
60. முரபொல மயானம்
61. மொரகொல்ல ஜனபதய மயானம், மொரகொல்ல
62. ஹபுதல உடகம கல்கொடுவ மயானம், ஹபுதல உடகம
63. ஹபுதல எகொடகம மயானம், ஹபுதல எகொடகம
64. ஹபுதல உடகம எஹகெட்டபொல மயானம், ஹபுதல உடகம
65. ஸ்ரீயாகம ஆதர்ஸ்ஸ கிராமத்தின் பொது மயானம்
66. மயிலபிட்டிய அக்கர பஹ பதன பொது மயானம்
67. அலவதகெடிய பொது மயானம்
68. ஏகலவத்த பொது மயானம்
69. நாரங்கஸ்தென்ன போகஸ்பெட்டிய பொது மயானம்
70. கொடமுன்ன பொது மயானம்
71. மஹமெதகம பொது மயானம்
72. பவ்லான பொது மயானம்
73. பவ்லான இஹலகந்த பொது மயானம்
74. கந்தேவெல பொது மயானம்
75. மிஹிதும்தென்ன பொது மயானம்
76. ஏகலவத்த ஜனபதய பொது மயானம்
77. நெல்லிகொல்ல பொது மயானம்
78. அக்கர தெஷிய கொனங்கொட பொது மயானம்
79. லூல்கந்துர பொது மயானம்
80. நரங்ஹின்ன தோட்ட பொது மயானம்
81. கலுகல பொது மயானம்
82. உடதெல்தோட்ட ஓசில்லாமுதுன பொது மயானம்
83. கலஹா தோட்ட பாலத்தருகின் பொது மயானம்
84. கிதுல்முல்ல தோட்ட பொது மயானம்
85. கலஹா தோட்ட மேல் பகுதி பொது மயானம்
86. உடதெல்தோட்ட நவ நிவாஸ பொது மயானம்
87. கால்லதென்ன பொது மயானம்
88. கால்லதென்ன சிங்கள ஜனதபயின் பொது மயானம்
89. அரலியகம சுதுவெல பொது மயானம்
90. கிரேட்வெலிய தெல்தோட்டை பொது மயானம்
91. அம்பலமானவத்த பஹல பொது மயானம்
92. கிரிமெட்டிய தோட்ட தமிழ் பொது மயானம்
93. கலஹாவத்த மல்பேரி பொது மயானம்
94. இஹகெட்டிய பொது மயானம்

## பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் உள்ள சங்க மண்டபங்களினதும், சனசமூக நிலையங்களினதும் பெயர்ப்பட்டியல்

1. சில்வர்தென்ன உதாக்கல கிராமத்தின் சனசமூக நிலையம்
2. உடுவெல ஹுனுகொடு சனசமூக நிலையம்
3. பஹல போகஹகந்த சனசமூக நிலையம்
4. உடுவெல கெரகல சனசமூக நிலையம்
5. கொன்கொல்ல சனசமூக நிலையம்
6. உடுவெல வதுலியத்த சனசமூக நிலையம்
7. உடுவெல்ல இம்புலெதென்னையில் சனசமூக நிலையம் (அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும்)
8. உடுவெல்ல தோட்ட சனசமூக நிலையம்
9. உடுவெல்ல லுனுவெல்ல சனசமூக நிலையம்
10. உடுவெல்ல உடகம சனசமூக நிலையம்
11. ரடேமுல்ல சனசமூக நிலையம்
12. ரடேமுல்ல ஜன உதான கிராம சனசமூக நிலையம்
13. உடுவெல்ல பல்லேகம சனசமூக நிலையம் (அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும்)
14. வெஹிகல்தெனிய சனசமூக நிலையம்
15. இஹலவத்த சனசமூக நிலையம் (அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும்)
16. புலியத்த சனசமூக நிலையம்
17. எதுல்கம உடகம சனசமூக நிலையம்
18. எலமல்தெனிய சனசமூக நிலையம்
19. இங்குருகொல்ல சனசமூக நிலையம்
20. கல்அலஸ் சனசமூக நிலையம்
21. நெஹினிவெல பன்சல் பூமியின் சனசமூக நிலையம்
22. ஹிப்பல சனசமூக நிலையம்
23. கொஸ்ஹின்ன சனசமூக நிலையம்
24. போலாபே மெத்தும் பண்டார லாதரு பாடசாலைக் கட்டிடம்
25. மடதெனிய சங்க மண்டபம்
26. கிவுலிந்த நிக்மாவத்த சங்க மண்டபம்
27. கொடலவெல சங்க மண்டபம்
28. அனுரகம உதாகல கிராமவெல்கால சனசமூக நிலையம்
29. நவநலிய சனசமூக நிலையம்
30. கொடஹெபிடிய சனசமூக நிலையம்
31. கொலபிஸ்ஸ பஹே கனுவையின் சனசமூக நிலையம்
32. முரபொல ஆராமய அருகின் சனசமூக நிலையம்
33. நிகத்தலவெல உதாகல கிராம சனசமூக நிலையம்
34. கஹம்பிலியாவ விகாரயின் அருகின் சனசமூக நிலையம்
35. உனுவின்ன சுகாதார மத்திய நிலையத்திற்கு அருகாமையின் சனசமூக நிலையம்
36. பல்லேமாஓய விகாரையின் அருகாமையின் சனசமூக நிலையம்
37. போப்பிடிய சனசமூக நிலையம்
38. தலாகடை சனசமூக நிலையம்
39. கந்தஹந்திய சனசமூக நிலையம்
40. உடுதெனிய சனசமூக நிலையம்
41. துல்முறே மிஹிதுன் தென்ன சனசமூக நிலையம்
42. அனுரகம மன்சன்திய சேவா பயச சனசமூக நிலையம்
43. கபுலியத்த கல்லனமுல்ல சனசமூக நிலையம்
44. பின்ன கொல்ல சனசமூக நிலையம்
45. கந்தேகம நுகலியத்த சனசமூக நிலையம்
46. மொரகொல்ல சனசமூக நிலையம்

47. லேடியகொல்ல மொரகொல்ல பேருந்து தரிப்பிடத்தருகாமையின் சனசமூக நிலையம்
48. ஶ்ரீயாகம உதாகல கிராம சனசமூக நிலையம்
49. வாடியகொட வசம தித்தவெல்கம சனசமூக நிலையம்
50. வெடேகேபொத பிலிகர சனசமூக நிலையம்
51. பல்லேகம முன்பள்ளி மண்டபம்
52. லுல்கந்துர நவ ஜனபதயவின் சனசமூக நிலையம்
53. எலிகேவெல சனசமூக நிலையம்
54. மயிலபிடிய அபோன்சு வத்த சனசமூக நிலையம்
55. தொலபோதென்ன அபோன்சு வத்த சனசமூக நிலையம்
56. மயிலபிடிய பொதுமக்கள் வாசிகசாலை மண்டபம்
57. ஹபுத்தலே உடகம சனசமூக நிலையம்
58. ஹபுத்தலே எகடகம ஹபுதலே உடகம சனசமூக நிலையம்
59. நுகலியத்த லேவ்லெ கம்மெத சனசமூக நிலையம்
60. கொடமுன்ன எகலவத்த சனசமூக நிலையம்
61. மொரகொல்ல சனசமூக நிலையமும் பல்நோக்கு சேவை மண்டபமும்
62. மொரகொல்ல மக்கள் குடியிருப்பின் கோவிலின் அருகாமையின் சனசமூக நிலையமும்
63. ஶ்ரீ சரணங்கர நலன்புரி சங்க மண்டபம், மொரகொல்ல
64. ஶ்ரீ ராகுல சங்க மண்டபம், மொரகொல்ல
65. ஸ்வஸரண நலன்புரி சங்க மற்றும் மரணாதார சங்க மண்டபம்
66. மைத்திரி நலன்புரி சங்க மண்டபம், எகெடிகொல ஹபுதலே உடகம
67. பராக்கிரம நலன்புரி சங்க மண்டபம், ஹபுதலே உடகம
68. ஸ்வசக்தி நலன்புரி சங்க மண்டபம், ஹபுதலே உடகம கீழ்ப்பிரிவு
69. பட்டியமுல்ல கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம்
70. ஶ்ரீ இஸ்பித்தாராம பல்நோக்கு சேவை மண்டபம்
71. எகொடகம நலன்புரி சங்க மண்டபம், ஹபுதலே எகொடகம
72. எகொடகம மேல் பிரிவு நலன்புரி சங்க மண்டபம்
73. இஹலவத்தகம நலன்புரி சங்க மண்டபம்
74. கலஹா மகாத்மா காந்தி சங்க மண்டபம்
75. கலஹா பௌத்த சங்க சனசமூக நிலையம்
76. கொடமுன்ன நெகனஹிர சனசமூக நிலையம்
77. கொடமுன்ன படஹிர சனசமூக நிலையம்
78. கொடமுன்ன சனசமூக நிலையம் (இ. வெ. ப.)
79. வெலேகம சனசமூக நிலையம்
80. மெதேகம கொலுவாகொட சனசமூக நிலையம்
81. மெதகம சனசமூக நிலையம்
82. பவ்லான சனசமூக நிலையம்
83. கந்தேவெல சனசமூக நிலையம்
84. எகலவத்த சனசமூக நிலையம் (இ. வெ. ப.)
85. மடதெனிய சனசமூக நிலையம்
86. தூல் முரே சனசமூக நிலையம்
87. மிஹிதுன்தென்ன சனசமூக நிலையம் (இ. வெ. ப.)
88. சிங்ஹாரகம சனசமூக நிலையம்
89. பின்னகொல்ல சனசமூக நிலையம்
90. மாரஸ்ஸன கிராம சனசமூக நிலையம்

5-225

---

## வவுனியா வடக்கு பிரதேச சபை

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டம்*

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் கீழ் வவுனியா வடக்கு பிரதேச சபை 04.08.2011 ஆந் திகதியில் நடைபெற்ற பொதுக்கூட்ட தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் - தீர்மானம் பிரசுரிக்கப்படுகிறது.*

### தீர்மானம்

உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் அவர்களால் ஆக்கப்பட்டு 1988 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் (பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி)பிரசுரிக்கப்பட்டதும், வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஏற்புடையதாகும் என கௌரவ வடக்கு கிழக்கு மாகாண ஆளுநரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1994 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதிய 842 ஆம் இலக்க வர்த்தமானியில் (பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி) பிரசுரிக்கப்பட்டதுமான நியமனத்துணைவிதிகள் I ஆம் பாகத்தையும், நியமத்துணைவிதிகள் II ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட நியமத்துணைவிதிகள் 01 தொடக்கம் 42 வரையுள்ளவற்றையும் வவுனியா வடக்கு பிரதேச சபையின் இடப்பரப்பிற்குள் அமுல்படுத்துவதற்காக, 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் கீழ் அச்சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ஆம் பிரிவிற்கமைய ஏற்றுக்கொள்வது என்று வவுனியா வடக்கு பிரதேச சபை இத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

மு. பாலசுப்பிரமணியம்.
தவிசாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி,
2012.02.15.

5-285/1

---

## வவுனியா வடக்கு பிரதேச சபை

மிருகவதைக் கட்டளைச் சட்டம் (272 ஆம் அத்தியாயம்)

**7 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் - 2012**

வவுனியா வடக்கு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் பிரதேச சபையால் சித்திபெற்ற குத்தகையாளருக்கு வழங்கப்பட்ட எந்தவொரு இறைச்சிக் கடையும் மிருகவதைச் சட்டத்தின் (272 ஆம் அத்தியாயம்) 17 (1) ஆம் பகுதியின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி குறிப்பிட்ட அட்டவணைப் பிரகாரம் குறிப்பிட்டுள்ள திகதிகளிலும் அரசினால் பிரகடனப் படுத்தப்படும் திகதிகளிலும், என்னால் இடைக்கிடை அறிவிக்கப்படும் தினங்களிலும் மிருகங்களை விற்பனை செய்தலும் விற்பனைக்காகத் தொங்கவிடப்படுதலும் இறைச்சி விற்பனை செய்யும்

இடங்களைத் திறந்து வைத்தலும் அறவே தவிர்க்கப்பட வேண்டும் என அறியத்தருகின்றேன்.

மு. பாலசுப்பிரமணியம்.
தவிசாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி,
2012.02.15.

**அட்டவணை**

1. இலங்கை சுதந்திரதினம்
2. மகா சிவராத்திரி தினம்
3. வெசாக் முழு நோன்மதி தினங்கள் (அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்படும் தினங்கள்)
4. உலக மிருக தினம்
5. மாதாந்த நோன்மதி தினம்

5– 285/5

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

தேசிய சூழல் சட்டத்தின் கீழான அறிவித்தல் – 2012

1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரசபையானது 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தினதும் 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின்படி மத்திய சூழல் தவிசாளரினால் குறித்த சட்டத்தின் 26 ஆம் பிரிவிற்கமைவாகவும், உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு 2001 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் கீழ்க்காட்டப்படும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரதேச சபையின் தலைவருக்கு கையளித்ததன்கீழ் வவுனியா வடக்கு பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் இச்சட்டத்தை அமுல்படுத்துவதோடு, கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கைத்தொழில்கள்மீது மத்திய சூழல் அதிகார சபையினால் குறித்துரைக்கப்பட்டவாறு, படிவங்கள், கட்டணங்கள், பரீட்சித்தற் கட்டணங்கள், உத்தரவுப்பத்திரக் கட்டணங்கள், ஆகியவை விதித்து அறவிடப்படல் செய்வது என இத்தால் தீர்மானித்து வெளிப்படுத்து கின்றேன். இவ்வெளிப்படுத்தல் ஆனது இதன் மூலம் அறவிடப்படும் கட்டணங்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் விதித்து அறவிடப்படும் உரிமக் கட்டணங்களைவிட மேலதிகமானதும் அவற்றை எவ்விதத்திலும் பாதிக்காததுமாகும்.

**அட்டவணை**

1. 25 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள சவர்க்காரம், அழுக்கு அகற்றிகள் அல்லது வேறு எவையேனும் சுத்திகரிப்புப் பொருட்கள் தயாரிக்கும் கைத்தொழில்கள்.
2. 150 மெற்றிக் தொன்னுக்கு குறைவான மொத்தக் கொள்ளளவு கொண்ட பாரிய திரவப் பெற்றோலிய களஞ்சிய வசதிகள்.
3. நாளொன்றுக்கு 100 கிலோகிராமிற்கு குறைவானதும் 50 கிலோகிராமிற்கு மேற்பட்டதுமான உற்பத்திக் கொள்ளளவு உடைய மணியிழை புகையூட்டிய இறப்பர் பட்டைத் தட்டுத் தயாரித்தல் கைத்தொழில்கள்.
4. தனி உற்பத்திச் சட்டத்தின் ஒரு குழுமத்திற்கு 10,000 தென்னஞ்சிரட்டைகளிற்கு குறைவானதும் 10,000 தென்னஞ் சிரட்டைகளிற்கு மேற்பட்ட மொத்த உள்ளீட்டுக் கொள்ளளவு உடைய தென்னஞ்சிரட்டை எரித்தல் கைத்தொழில்.
5. 25 இற்கு குறைவானவர்களும் 10 இற்கு மேற்பட்டவர்களுமான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட ஆயுர்வேத, சுதேச மருந்து உற்பத்திகளின் தயாரித்தல், பிரித்தெடுத்தல் அல்லது முறைப்படுத்தலுடன் தொடர்புடைய கைத்தொழில்கள்.
6. ஈயத்தை உருக்கி எழுத்து தயாரித்தல் தவிர்ந்த அச்சகங்கள்.
7. 10 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட பற்றிக் கைத்தொழில்கள்.
8. 10 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள கண்ணாடியிழையை மூலப்பொருளாக பாவித்தலுடன் தொடர்புடைய கைத்தொழில்கள்.
9. 10 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட சேதனக் கரைப்பான்களை பாவித்தலுடன் உலர்சலவை நடவடிக்கைகளுடன் கூடிய வர்த்தக சலவை அகங்கள்.
10. ஈரத் தொழிற்பாடுகளைப் பிறப்பிக்கும் கழிவுகள் தவிர்ந்த தோல் பதனிடும் கைத்தொழில்கள்.
11. இயற்கை இழைகளை வெளிறச்செய்தல் அல்லது சாயமூட்டும் நடவடிக்கையை கொண்டிராத தென்னந்தும்பு ஆலைகள்.
12. 25 இற்கு குறைவான நெசவு இயந்திரங்களைக் கொண்ட நெசவுசாலைகள்.
13. 10 இற்கு மேற்பட்ட கைத்தறிகளைக் கொண்ட கைத்தறிச் சாலைகள்.
14. சீனித்தொழிற்சாலை அல்லது சீனி சுத்திகரிப்பு நிலையங்கள் தவிர்ந்த கரும்புக் கைத்தொழில்கள்.
15. 25 இற்கு குறைவானவர்களும் 05 இற்கு மேற்பட்டவர்களுமான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட மரக்கறி, பழம், இறைச்சி, கடல் உணவு மற்றும் பால் பதனிடல் கைத்தொழில்கள்.
16. 25 இற்கு குறைவானவர்களும் 10 இற்கு மேற்பட்டவர்களுமான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட தேங்காய் எண்ணெய் பிரித்தெடுத்தல் கைத்தொழில்கள்.
17. 25 இற்கு குறைவானவர்களும் 5 இற்கு மேற்பட்டவர்களுமான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட வெதுப்பக உற்பத்திகள், பிஸ்கட்டுகள், இனிப்புக்கள் தயாரிக்கும் கைத்தொழிற்சாலைகள்.
18. 25 இற்கு குறைவானவர்களும் 10 இற்கு மேற்பட்டவர்களுமான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட மதுசாரம் தவிர்ந்த பானம் தயாரிக்கும் கைத்தொழிற்சாலைகள்.

19. எரிசோடாவைப் பாவித்து போத்தல் கழுவும் நடவடிக்கைகளைக் கொண்டிராத ஏனைய போத்தலிடும் நிலையங்கள்.

20. நாளொன்றிற்கு 5,000 கிலோ கிராமிற்கு குறைவான உற்பத்திக் கொள்ளளவு கொண்ட ஈர நடவடிக்கைகளுடன் கூடிய அரிசி ஆலைகள்.

21. உலர் நடவடிக்கைகளுடன் கூடிய அரிசி ஆலைகள் (ஈரமுறை தவிர்ந்த ஏனையவை).

22. அரைக்கும் ஆலைகள்.

23. 2500 இற்கு குறைவானதும் 50 இற்கு மேற்பட்டதுமான பறவைகளைக் கொண்டிருக்கும் கோழிப்பண்ணைகள்.

24. 50 இற்கு குறைவானதும் 05 இற்கு மேற்பட்டதுமான விலங்குகளைக் கொண்டிருக்கும் பன்றிப் பண்ணைகள்.

25. 50 இற்கு குறைவானதும் 10 இற்கு மேற்பட்டதுமான விலங்குகளைக் கொண்டிருக்கும் மாட்டு/ஆட்டுப்பண்ணைகள்.

26. நாளொன்றிற்கு 25 மெற்றிக்தொன்னுக்கு குறைவான உற்பத்திக் கொள்ளளவு உடைய விலங்குத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலைகள்.

27. 300 கிலோவிற்கு குறைவானதும் 100 கிலோவிற்கு மேற்பட்டதுமான மொத்த உற்பத்தித் திறன் கொண்ட நீர் அல்லது சூரிய அல்லது காற்றுவலு உற்பத்தி தவிர்ந்த மின்சாரப் பிறப்பாக்கி கைத்தொழில்கள்.

28. நாளொன்றிற்கு 50 கன மீற்றருக்கு குறைவான உற்பத்தித் திறன் கொண்ட கொங்கிறீற் கலவை நிலையங்கள்.

29. கொங்கிறீற் அச்சுக் கைத்தொழில்கள்.

30. பொறிமுறைப்படுத்தப்பட்ட சீமெந்துக் குற்றி தயாரித்தல் கைத்தொழில்கள்.

31. 20 மெற்றிக்தொன்னுக்கு குறைவான உற்பத்தித் திறன்கொண்ட சுண்ணாம்புச் சூளைகள்.

32. 25 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட மட்பாண்டக் கைத்தொழில்கள்.

33. ஓடு மற்றும் செங்கட்டிச் சூளைகள்.

34. கை உபகரணங்களை பாவித்து கைகளால் நொறுக்கும் நடவடிக்கைகள் தவிர்ந்த நாளொன்றிற்கு 25 கன மீற்றருக்கு குறைவான உற்பத்திக் கொள்ளளவு உடைய கருங்கல், நொறுக்குதல் அல்லது பதனிடுதல் கைத்தொழில்கள்.

35. நாளொன்றிற்கு 5 மெற்றிக் தொன்னுக்கு குறைந்த உள்ளீட்டுக் கொள்ளளவு கொண்ட எரியூட்டிகள்.

36. போரான் பரிகரணம் மற்றும் மருந்தைப் பழுதடையாது பாதுகாத்தலுடன் தொடர்புடைய கைத்தொழில்கள்.

37. நாளொன்றிற்கு 50 கன மீற்றருக்கு குறைவான கொள்ளளவு உடைய அரியும் ஆலைகள்.

38. 3 குதிரை வலுக்களுக்கு மேற்பட்ட வலுக்களைப் பாவிக்கும் தச்சு வேலைத்தளங்கள்.

39. 20 இற்கு குறைவான அறைகளைக் கொண்ட உல்லாச விடுதிகள், விருந்தினர் இல்லங்கள் மற்றும் இளைப்பாறும் இல்லங்கள்.

40. 5 இற்கு மேற்பட்ட வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட சமைக்கும் வசதிகளுடன் கூடிய தங்கும் வசதியற்ற உல்லாச விடுதிகள்.

41. 25 இற்கு மேற்பட்டவர்களும் 200 இற்கு குறைந்தவர்களுமான தங்குநர்களுக்கு உணவு உறைவிட வசதிகள் வழங்கக்கூடிய விடுதிகள்.

42. மாற்று முறை ஒன்றிற்கு 200 இற்கு குறைவானவர்களும் 10 இற்கு மேற்பட்டவர்களுமான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள தைத்த ஆடைக் கைத்தொழில்கள்.

43. மாதமொன்றிற்கு 600 கனமீற்றருக்கு குறைவான உற்பத்திக் கொள்ளளவுடன் கூடிய தனித்துளை வெடிப்புச் செயற்பாடுகள்.

44. 25 இற்கு குறைந்த வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட கடைச்சல் பட்டறைகள், உருக்கி ஒட்டும் (வெல்டிங்) வேலைத் தளங்கள் உட்பட வடிவமைப்புத் தொழிற்சாலைகள், இயந்திரங்கள், இயந்திக் கருவிகள், உபகரணங்கள் தயாரித்தல் அல்லது ஒன்றிணைக்கும் கைத்தொழில்கள்.

45. பழுது பார்த்தல், பராமரித்தல் மற்றும் தன்னியக்க வாயு நிலையங்களை ஸ்தாபித்தல் என்பவற்றைச் செய்யக்கூடிய வசதிகள் உள்ளிட்ட வாகனங்களைப் பழுது பார்க்கும் அல்லது பராமரிக்கும் நடவடிக்கைகள் செய்யும் வாகனங்கள் திருத்தும் இடங்கள்.

மு. பாலசுப்பிரமணியம்.
தவிசாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி,
2012.02.15.

5— 285/7

# நானாவித அறிவித்தல்கள்

**வவுனியா வடக்கு தமிழ் பிரதேசசபை**

*உரிமக் கட்டணம் அறவீடு - 2012*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 147, 148, 149, 150 (1), (2), 151, 152(1), (2), 153 (1), 154 (1) ஆம் பிரிவுகட்கு அடக்கமாக, 2012 ஆம் ஆண்டு நிதி ஆண்டுக்கான கீழே தரப்பட்ட அட்டவணையின் பிரகாரம் உரிமக்கட்டணம், தொழில்மீதான வரி

அறவிடுவது என 04.08.2011 ஆந் திகதிய சபைக் கூட்டத்தின் 1 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டுள்ளது. உரிமக்கட்டணங்கள் அனைத்தும் அட்டவணையின் பிரகாரம் நிதி ஆண்டுக்குள் செலுத்தப்படவேண்டும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

மு. பாலசுப்பிரமணியம்.
தவிசாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி,
வவுனியா,
2012.02.15.

**அட்டவணை**

| இல. | வியாபாரத் தன்மை | 2012 ஆம் ஆண்டிற்கான அறவீடு ரூ. ச. |
|---|---|---|
| 1. | தேநீர் கடை நடாத்துதல் "A" | 1,000 0 |
| 2. | தேநீர் கடை நடாத்துதல் "B" | 750 0 |
| 3. | சாப்பாட்டுக்கடை நடாத்துதல் | 1,000 0 |
| 4. | தேநீர்க் கடையும், சாப்பாட்டுக்கடையும் நடாத்துதல் | 1,000 0 |
| 5. | பேக்கரி நடாத்துதல் | 1,000 0 |
| 6. | முடி வெட்டும் கடை நடாத்துதல் | 1,000 0 |
| 7. | சலவைக்கடை நடாத்துதல் | 400 0 |
| 8. | மாட்டிறைச்சிக் கடை நடாத்துதல் | 1,000 0 |
| 9. | மீன்கடை நடாத்துதல் | 1,000 0 |
| 10. | கூட்டுறவுச்சங்க விற்பனைக்கடைகள் நடாத்துதல் | 1,000 0 |
| 11. | ஆட்டிறைச்சிக்கடை நடாத்துதல் | 1,000 0 |
| 12. | சில்லறைக்கடை நடாத்துதல் தரம் "A" | 1,000 0 |
| 13. | சில்லறைக்கடை நடாத்துதல் தரம் "B" | 500 0 |
| 14. | குளிர்பானக்கடை நடாத்துதல் | 1,000 0 |
| 15. | இரும்புப் பொருட்கள் வைத்து விற்பனை | 1,000 0 |
| 16. | கட்டடப் பொருட்கள் வைத்து விற்பனை நிலையம் | 1,000 0 |
| 17. | 20 பைக்கட்டுகளுக்கு மேல் சீமேந்து வைத்து விற்பனை | 1,000 0 |
| 18. | மரக்காலை அல்லது மரத்தளபாடம் வைத்து விற்பனை | 1,000 0 |
| 19. | தச்சுத் தொழிற்சாலை வைத்து நடாத்துதல் | 1,000 0 |
| 20. | வீட்டுத்தளபாடங்கள் வைத்து விற்றல் | 1,000 0 |
| 21. | விறகு காலை வைத்து நடாத்துதல் | 500 0 |
| 22. | மரக்கறிக்கடை வைத்து நடாத்துதல் | 300 0 |
| 23. | 1000 தேங்காய்களுக்கு மேல் வைத்துவிற்பனை செய்தல் | 1,000 0 |
